செய்தி வெளியீடு எண் : 2172 நாள் : 01.12.2022

**மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. மு.பெ.சாமிநாதன் அவர்களின் இரங்கல் செய்தி.**

தமிழ்த் திரைப்பட தயாரிப்பாளர் சங்கத்தின் முன்னாள் பொருளாளராகவும், தலைவராகவும் பணியாற்றிய எல்.எம்.எம். என்று அழைக்கப்படும் லட்சுமி மூவி மேக்கர்ஸ் நிறுவனத்தின் பங்குதாரரும், பல வெற்றி தமிழ்த் திரைப்படங்களை தயாரித்தவருமான திரு.கே.முரளிதரன் அவர்கள் இன்று (01.12.2022) இயற்கை எய்தினார் என்ற செய்தியை அறிந்து மிகுந்த மன வருத்தம் அடைந்தேன்.

அன்னாரது மறைவுக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொண்டு, அன்னாரது பிரிவால் வாடும் குடும்பத்தினருக்கும், திரைத்துறையைச் சார்ந்த தயாரிப்பாளர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in